
அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்



உள்ளே...

ஆசிரியர் தலையங்கம் .................................. 1

நெஞ்சமே அஞ்சாதே நீ!

மகிழ்ச்சியின் இரகசியம்..................................2

இல்லறம் இனிக்க.............................................3

சங்க இலக்கியம் .............................................4

கவிதைகள். ..................................................... 6

சிந்தனை 8 செயல் 7 ஆசிரியர் மரு.த.இராசலிங்கம் சூன் 2026

**பண்புள்ள தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!**

## மக்கள் தீர்ப்பை மதிக்காத மக்கள் பிரதிநிதிகள்!

சரியோ, தவறோ குடியாட்சியில் எண்ணிக்கைதான் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றாலும் அது வெற்றிதான், ஒரு இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றாலும் அது வெற்றிதான். தேர்தலின் போது, சில காரணங்களின் அடிப்படையில் - அவை நியாயமானதா என்பதையெல்லாம் எண்ணிப்பார்க்காமல் ஒருவரை மக்கள் தங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் அந்த வேட்பாள ருக்காக அல்லாமல், அவர் எந்தக் கட்சியின் சார்பாகப் போட்டியிடுகிறாரோ, அந்தக் கட்சியின் பால் கொண்டுள்ள ஈர்ப்புக்காகவும், குறிப்பிட்ட அந்த வேட்பாளரை மக்கள் ஆதரிக்கலாம். நிலைமை இவ்வாறு இருக்கும் போது,

## வெற்றி பெற்ற பின் அந்த சட்டமன்ற உறுப்பினர் என்ன செய்கிறார் ?

தன்னைத் தேர்ந்தெடுத்த மக்களை சிறிதும் மதிக்காமல், மக்களாட்சி மாண்பைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு, தன் சுய இலாபத்துக்காக, சட்டமன்ற உறுப்பினர் பதவியை உதறிவிட்டு, வேறு ஒரு கட்சியில் போய் இணைந்துவிடுகிறார். அண்மையில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு இவ்வாறு நான்கு பேர் தங்களை மதித்து வெற்றி பெறச் செய்த மக்களின் முகத்தில் கரியைப் பூசிவிட்டு, ஓடிவிட்டார்கள். ஜனநாயகத்தின் மிகக் கேவலமான செயல் இது. குறைந்தபட்சம் அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? தொகுதி மக்களிடம் மன்னிப்பு கோரியிருக்க வேண்டும்.

## தேர்தல் ஆணையமும் சட்டமும் என்ன செய்ய வேண்டும்?

1.ஒருவர் வெற்றி பெற்று மக்கள் பிரதிநிதியான பின்பு, திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டு, ஜனநாயகக் கடமையாற்ற முடியாத இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டால் அவரது பதவிவிலகலை அப்படியே ஏற்றுக் கொண்டு மறுதேர்தல் நடத்தலாம்.

2.ஆனால், ஒருவர் தன் சுயநலத்துக்காக, பதவி விலகுகிறார் என்றால், அந்தத் தொகுதியின் தேர்தல் செலவுகளை அவரிடம் வசூலிக்க சட்டம் வேண்டும்.

3.அப்படிப்பட்ட சுயநலவாதிகள் தேர்தலில் போட்டியிட குறைந்தது ஐந்து ஆண்டுகள் தடை விதிக்க வேண்டும்.

## மக்கள் என்ன செய்ய வேண்டும்?

தங்களை மதிக்காத அந்த அரசியல்வாதி மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு வாக்கு கேட்டு வந்தால் அவரைப் புறக்கணிக்க வேண்டும்.

மக்களாட்சி மாண்பு சீர்குலைந்து விட்டால், நாட்டில் நல்லாட்சி காண முடியாது. எனவே, நீதிமன்றங்களும், தேர்தல் ஆணையமும், மக்கள் பிரதிநிதிகளின் இத்தகையப் போக்கு குறித்து தீவிரமாகச் சிந்தித்து உரிய வழிகாட்டுதலை வழங்க வேண்டும்.

நாட்டின் நலன் கருதி அரசியல் கட்சிகள், கருத்து பேதமின்றி, சுயநல அரசியல்வாதிகளின் மக்கள் தீர்ப்பை மதிக்காத இந்தத் தான்தோன்றித்தனமானப் போக்கிற்கு எதிராக நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்ற முன்வர வேண்டும்.

முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையாளர், திரு. கோபால்சாமி அவர்கள், இதே கருத்துகளை வலியுறுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



...............அன்புடன். ஆசிரியர்.

## நெஞ்சமே அஞ்சாதே நீ!

டாக்டர். எம்.எஸ்.உதயமூர்த்தி

சுதந்திரமான வாழ்க்கை வாழ, நமக்கு முதலில் சுதந்திரமான மனம் வேண்டும். நமது எண்ணங்களும் பழக்க வழக்கங்களும் சமுதாயக் கோட்பாடுகளும் பல விதங்களில் நமது விடுதலை மனோபாவத்தை - ஆக்க சக்தியினை குறைத்து விடுகின்றன.

புதிய மனிதர்களைக் கண்டு பழகத் தயங்கும் மனோபாவம், புதிய இடங்களில் போய் வசிப்பதற்கு ஏற்படும் பயம், நெறி- திட்டம் என்று நம் வாழ்க்கையை நெருக்கிக் கொண்டு வாழும் போக்கு - தோல்வி ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் புதிய விடயங்களைத் தொடங்கத் தயங்குதல் என்று பல வழிகளில் நம் மன இயக்கத்தை நாம் முடக்கி வைத்திருக்கிறோம்

பயத்தின் பெருங்காரணம் நமது அறியாமைதான். நம் அறியாமைதான் நம்மைக் கட்டிப் போட்டுவிடுகிறது. நாம் கட்டுப்பெட்டிகளாய் வாழ்க்கை நடத்துகிறோம். முன்பு கடல் தாண்டிச் சென்றவர்களை சாதியைவிட்டு நீக்கிவைக்கும் வழக்கம் இருந்தது. ஆனால் காந்தி அதனால் முடங்கிவிடவில்லை. இங்கிலாந்து சென்றார், தென்னாப்ரிக்கா சென்றார். தலைவராகத் திரும்பினார்.



மற்றோர் வகை மனமுடக்கம், திட்டப்படி வாழ்தலாகும். ஒரு நெறி ஏற்படுத்திக் கொண்டு அதற்கு அடிமையாகி விடுதல். “என்னால் அப்படிச் செய்ய முடியாது என் பழக்கம் அது” என என்றைக்குச் சொல்லத் துவங்கு கிறோமோ அன்றே நாம் பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டோம்.

## மகிழ்ச்சியின் இரகசியம்.

முனைவர்.லெ.பாஸ்கர்

நம் வாழ்க்கையில் நாம் எல்லோருமே வெவ்வேறு சூழ்நிலைக்கேற்ப வெவ்வேறு பாத்திரம் ஏற்று நடித்துக் கொண்டிருக்கிறோம். எல்லாப் பாத்திரங்களிலும் **“நான்”** மட்டும் நடுநாயகமாக இருக்கிறது. அதேபோல் சிந்திப்பவன், படிப்பவன், துக்கப்படுபவன், சந்தோசப்படுபவன், என்று ஒருபக்கம் பல்வேறு வேடங்களில் **“நான்”** இருந்தாலும், இன்னொரு பக்கம் இந்த வேடங்களிலி ருந்து அவன் நிம்மதியாக இருக்கிறான். அந்த **“நான்”** என்ன என்பதைப் புரிந்து கொள்ளாமல் வேடங்கள்தான் **“நான்”** என்ற குழப்பத்தோடு நாம் செயல்படுகிறோம். அதற்காக நாம் அலுத்துக் கொள்வதில்லை. சொல்லப்போனால் பல்வேறு பாத்திரங்களில் மிகவும் பூரிப்புடனே நடித்துக் கொண்டிருக்கிறோம்.

நேரத்தின் பிடியில் நாம் இருக்கிறோம் நமது வாழ்க்கையில் நேரம் பல மாறுதல்கள் ஏற்படக் காரணமாக அமைகிறது. நேரமும் காலமும் நம்மைக் கட்டுப்படுத்துவதால், நமக்குள் இருந்த சில விருப்புகள் நிறைவேறாமல் போய்விடுகின்றன. இருந்தாலும் நாம் துவண்டு விடுவதில்லை. எல்லாவற்றையும் மீறி அவ்வப்போது நாம் மகிழ்ச்சியாக இருக்கிறோம். கால மாறுதல்களைப் புரிந்து கொண்டு நம்மைத் தகவமைத்துக் கொண்டால், நான் என்ற அகந்தையைக் கைவிட்டு, நாம் என்று எண்ணத் தொடங்கினால், நாம் மகிழ்ச்சியோடு இருப்ப தோடு மற்றவர்களின் மகிழ்ச்சிக்கும் காரணமாக இருப்போம்.



வாழ்வின் மிகப் பெரிய பாக்கியம் என்னவென்றால், நம்மால் இன்னொருவரது வாழ்க்கையில் மகிழ்ச்சி உண்டாவதே! இந்த இரகசியத்தை, இரகசியமாக வைத்திருக்காமல் செயலில் காட்டுவோம்!

.

சென்ற இதழ் தொடர்ச்சி....

## 2.விட்டுக்கொடுத்து வாழுங்கள்!

விட்டுக்கொடுத்து வாழ்வது என்பது இல்லறத்தின் இன்றியமையாதப் பண்பாகும். சில அற்பத்தனமான காரியங்களில் நம் கவனத்தைச் செலுத்தி, அதையே வலியுறுத்திக் கொண்டு, நம் சக்தியை வீணாக்காமல் பெருந்தன்மையோடு விட்டுக் கொடுத்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அதுதான் இனிமையான இல்லறத்துக்கு அழகு. விட்டுக் கொடுத்துச் செல்வதால் நாம் ஒன்றும் குறைந்துவிடப் போவதில்லை. விட்டுக்கொடுக்கக் கூடாதது ஒன்று உண்டு என்றால், அது அவரவர் தன்மானம் மட்டுமே.

அன்பு என்னும் அச்சாணி முறியும் அளவுக்கு சடங்கு, சம்பிரதாயம், கொள்கைச் சுமைகளை இல்லறம் என்னும் வண்டியில் ஏற்றக் கூடாது.

விட்டுக் கொடுப்பது என்பது தாழ்ச்சியல்ல; ஒருவரையொருவர் மதிப்பதற்கான அடையாளம் அது! ஒருவர் மீது ஒருவர் கொண்டிருக்கும் நம்பிக்கையின் வெளிப்பாடு அது! இல்வாழ்க்கை யில் பொதுவான அமைதிக்காக, நன்மைக்காக ஒன்றை விட்டுக்கொடுப்பதால் ஒருவர் தன் நிலையில் உயர்கின்றார்; தாழ்வதில்லை. குடும்ப ஒற்றுமை கருதி ஒருவர் விட்டுக்கொடுத்துச் செல்கிறார் என்பதற்காக அவரைக் குறைவாக எண்ணிவிடக் கூடாது. அவர் என்றைக்கும் குன்றின் மேல் இட்ட விளக்காகவே ஒளிர்ந்து கொண்டிருப்பார்.

தியாகம் என்பது என்ன? அன்பால் பிணைக்கப்பட்டவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்வதுதான் பெரிய தியாகம். அந்தப் பெருந்தன்மை இல்லையென்றால் கணவனும் மனைவியும் உள்ளத்தால் ஒன்றுபட்டு கூடிவாழ முடியாது. கணவனும், மனைவியும் கற்றுக் கொள்ள வேண்டிய முதல் பாடமும் கடைசிப் பாடமும் அதுவே! இந்தப் பாடம்தான் குழந்தை வளர்ப்புக்கும், அவர்களை நல்ல குடிமக்களாக உருவாக்குவதற்கும் பயன்படும்.

விட்டுக்கொடுத்து வாழுங்கள்!

ஒளிமயமான எதிர்காலத்துக்கு வீட்டில் “அன்பு” விளக்கேற்றுங்கள்!

.......இல்லறம் தொடர்ந்து இனிக்கும்.

**தமிழ் அறம் மின்னிதழ்**
**வெளியிடுபவர் : மருத்துவர்.த.இராசலிங்கம். MBBS.,Dip.Diab**
**4/16, இராம் நகர். தூத்துக்குடி.**

# சங்க இலக்கியத்தில் உவமையழகு
# கலித்தொகை -- நெய்தற்கலி

தெய்வத்தை வழிபட்டு பணிந்து வேண்டுகின்றோம். எதற்காக? துன்பம் எதுவும் வராமலிருக்க வேண்டும் என்பதற்காக. ஆனால் அந்த தெய்வமே நம்மை வருத்தினால் எப்படியிருக்கும்? அதுபோல், தலைவியின் மேல் ஊரார் பழிதூற்ற, தலைவன் பிரிந்து சென்றுவிட்டால் தலைவியின் நிலைமை எப்படியிருக்கும் என்பதை உவமையாகப் பொருத்திக் காட்டுகிறார் புலவர் நல்லுந்துவனார்.

**வழிபட்ட தெய்வம்தான் வலி எனச் சார்ந்தார்கண்**
**கழியும் நோய் கைம்மிக அணங்கு ஆகியது போல**
**பழி பரந்து அலர் தூற்ற, என் தோழி**
**அழி படர் அலைப்ப, அகறலோ கொடிதே.**

மாலைப் பொழுதில் காதல் நோயால் வருந்தியிருக்கின்றாள் தலைவி. அப்பொழுது அங்கே வந்த காதலன் அவளைத் தொடவும் அவளுடைய துயரும், பசலையும் மறைந்து போனதாம். அது எப்படியிருக்கிறதாம். குடிகளைப் பாதுகாத்துப் பேணும் பாண்டிய மன்னனின் படைக் கலன்களைக் கண்டதும் ஓடி மறைந்து விடுகின்ற பகைவர்களைப் போல் இருக்கின்றதாம். அந்த உவமையழகு இவ்வாறு வெளிப்படுகிறது.

**படு சுடர் மாலையோடு பைதல் நோய் உழப்பாளை**
**குடி புறங்காத்து ஓம்பும் செங்கோலன் வியன் தானை**
**விடுவழி விடுவழிச் சென்றாங்கு, அவர்**
**தொடுவழித் தொடுவழி நீங்கின்றால் பசப்பே.**

ஞாயிறு மறைந்து, பகல் பொழுதும் சென்றுவிட, இருள் வந்து படர்வதை இவ்வாறு உவமை அமைத்துக் கூறுகிறது இப்பாடல்.
நன்மைகளும், வாய்மையும், நடுவுநிலைமையும் இவனிடத்திலிருந்துதான் தோன்றின போலும் என்று மன்னன் மறைவுக்குப் பின்னர் அவனை மக்கள் நினைக்கும் அளவுக்கு அரசாண்டிருந்தான் ஒருவன். அவனுக்குப் பிறகு அந்நாட்டு செல்வங்களும் மாய்ந்து போனதாம்.

**நயனும், வாய்மையும், நன்னர் நடுவும்,**
**இவனின் தோன்றிய, இவை என இரங்க,**
**புரை தவ நாடி, பொய் தபுத்து, இனிது ஆண்ட**
**அரைசனோடு உடன் மாய்ந்த நல் ஊழிச் செல்வம் போல்,**

......................உவமையழகு தொடரும் **மரு.த.இராசலிங்கம்**




## தமிழ் இலக்கியப் பேரவைக் கூட்டம்

21.06.2026 அன்று தூத்துக்குடியில் தமிழ் இலக்கியப் பேரவையின் இலக்கியம் பூக்கும் இனிய மாலை 285 ஆவது கூட்டம், பேரவைத் தலைவர் **திரு.துரை கணேசன்** அவர்களின் தலைமை யில் நடைபெற்றது. செயலாளர்.திரு. **ஆதி.அருமைநாயகம்** வரவேற்றார். இலக்கியச் செம்மல். **புலவர்.பே.சங்கரலிங்கம்** அவர்கள் வாழ்த்துரை வழங்க, **மருத்துவர்.த.இராசலிங்கம் "கல்கண்டு காமத்துப்பால்"** என்னும் பொருளில் சிறப்புரையாற்றினார். **கவிஞர்.ஐடா சவரிமுத்து** மற்றும் **கவிஞர்.சரசுவதி பாபு, கவிஞர்.தா.செல்வராஜ்** ஆகியோர் கவிதை வழங்கினர். குமிழ்முனை. **சைமன்** அவர்களின் **"குளிர் உதடுகள்"** என்னும் நூலின் ஆய்வுரையை செல்வி.**இரா.ஆவுடை லட்சுமி** வழங்கினார். கூட்டத்தில் பேரவை முன்னவர்.அரு.அ.சீ தனபாலன், மருத்துவர்.சந்திரசேகர், எழுத்தாளர். மணிமொழிச் செல்வன், திரு.தாழைமணி, முனைவர். நீதிச்செல்வன், கவிஞர்.க.தேவிகா, திரு.முருகேசன் உட்பட இலக்கிய ஆர்வலர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

## மக்கள் சக்தி இயக்கம்

தமிழர்தம் அறிவுக்கும், திறனுக்கும் ஏற்ற உன்னதமான தமிழ்ச் சமுதாயத்தைப் போற்றிப் பாதுகாப்போம் என்ற இலட்சியத்தோடு சிந்தனையாளர். **டாக்டர். எம்.எஸ். உதயமூர்த்தி** அவர்களால் உருவாக்கப்பட்ட இயக்கம். மக்கள் சக்தி இயக்கம்.

சாதி, மதம், கட்சி பாகுபாடற்ற ஒரே இயக்கம் மக்கள் சக்தி இயக்கம். நாட்டு நலனில் அக்கறை கொண்டு, தன்னலமற்ற தொண்டாற்றி வரும் உண்மையான தூயசக்தி மக்கள் சக்தி இயக்கம்தான்!

ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் நல்ல நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும், உழைப்பின் மீது நம்பிக்கை வைத்து நேர்மையாகத் தொழில் செய்து பொருளீட்ட வேண்டும். தான் வாழ்கின்ற சமுதாய முன்னேற்றத்துக்கு பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தும் **சுயவளர்ச்சி, சுயபொருளாதார மேம்பாடு, சமுதாய ஈடுபாடு** என்னும் முத்தான மூன்று கொள்கைகளைக் கொண்ட இயக்கம்.

## வள்ளுவம்...

நூலை
நுகர...

மலர்கள்
வாசத்தால்
முந்தும்!

பன்னீரில்
குழைத்த
சந்தனமாகும்!
மணம் வீசும்!

தேனில்
தோய்த்த
வரிகள்...

சிந்தைக்கு
விருந்தாகி
இனிக்கும்!

இம்மாங்கனியை
சுவைக்க...

அறுக்கும்
கத்தியும்
ஆசைப்படும்!

அறிவெனும்
அமுதூட்டும்!

அதிசயம் வள்ளுவம்
அறிவுக் களஞ்சியம்!

கவிஞர்.கலியுகன் கோபி
சென்னை

## துணிந்து செய்!

படைகள் கூட்டமாய்
பாய்ந்தே வந்தாலும்
தடைகள் தோன்றி
தடுத்தே நின்றாலும்,
மடைகள் திறந்து
மறித்தே ஓடினாலும்,
உடைக்கும் உளியாய்
உறுதியுடன் செயல்படு!

கலக்கக் கண்ணாடி
கடலில் எறிந்து,
விலக்கிடு குழப்பம்
வீரியப் பயிராய்
பலரது பார்வைகள்
பாதை மாறினாலும்,
இலக்கு உனதாக்கி
ஏறிடு சிகரமே!

அஞ்சி நடுங்கி
ஆழம் புதையாது
பஞ்சாய்ப் பறந்து
பார்வையில் மறையாது
கெஞ்சியே வேண்டி
கீழாய்ப் பணியாது
விஞ்சி எழுந்தே
வீரமாய் செயல்படு!

கொடி ஏற்றிட,
கொள்கை நாட்டிட,
கடிதாய் எண்ணியே
காரணம் தேடாது,
முடிக்க நினைத்ததை
முன்னேற்றம் கொண்டே
துடிப்புடன் எழுந்தே
தோன்றிடு ஒளியே!

கவிஞர்.ஆசிரியர்.க.தேவிகா
தூத்துக்குடி.